1974 ஏப்ரல் 17]

திரு. ஆ. பரந்தாமன்: தமிழ்நாட்டில் பயன்படுத்துகிற பெட்ரோலுக்கு மத்திய அரசு ஒரு வரி வசூலிக்கிறார்கள். அதிலே 70 சதவிகிதத்தை அந்தந்த மாநிலங்களுக்குத் தந்துவிட வேண்டும். 30 சதவிகிதத்தை ரிசர்வ் ஃபண்டில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி நமக்கு ஒரு கோடி சொச்சம் ரூபாய் வரவேண்டியிருக்கிறது. 70 சதவிகிதம் திருப்பித் தருவதில் காலதாமதம் ஏற்படுகிறது; 30 சதவிகிதம் ரிசர்வ் பண்டை வைத்துக்கொண்டு அந்தந்த மாநிலங்களில் அவ்வப் போது தேவைக்கேற்ப நிதியை ஒதுக்குகின்றார்கள். அது நம் மாநிலத்திற்குக் குறிப்பாக ஒதுக்கப்படவில்லை. போக்குவரத்துத் துறை மானிய விவாதத்தின்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதுபற்றி அவர்களோடு பேசினார்கள் என்று தெரிவித்தார்கள். மத்திய அரசை வற்புறுத்தி விரைவில் 70 சதவிகிதத்தைத் தருவதற்கும் ரிசர்வ் பண்ட் தொகையை முழுவதும் தமிழ்நாட்டுக்கு ஒதுக்குவதற்கும் நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 70-30 அல்லது 80-20. 20 சதவிகிதம் ரிசர்வ் பண்ட். 80 சதவிகிதத்தை மாநிலத்திற்குக் கொடுத்து விடுகிறார்கள். பணத்தை ஒதுக்குவதில் காலதாமதம் இருப்பதாகத் தகவல் இல்லை; காலதாமதம் இல்லை. ரிசர்வ் பண்ட் எது எதற்கு ஒதுக்கப்பட வேண்டுமென்பது பற்றி மத்திய அரசு கூட்டும் மாநாட்டில் கலந்து கொள்ளும்போது விரிவாகப் பேசப் படும்.

Overbridge near Pachakuppam

* 842 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is a proposal under the consideration of the Government to construct an overbridge on Madras–Bangalore Railway line near Pachakuppam level crossing; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இப்பணி நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the railway crossing at Pachakuppam has become a bottleneck to vehicular traffic not only from our State but from Karnataka, Maharashtra, Andhra, etc., as all of them have to pass through that level crossing. So, all vehicles stop there for furlongs and furlongs and the level crossing is closed for long time as many trains have to pass and a lot of time is wasted causing great inconvenience. This is the second time I am putting this question. I therefore request the Hon. Minister whether he would give top priority for this and take up this work immediately. Will he do that?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, only to relieve the traffic bottleneck there, Government have taken steps to lay an over-bridge there. The alignment is being investigated. As soon as the alignment is finalised, work will be taken up.

குடனாற்றுப் பாலத்தை அகலப்படுத்தல்

*843 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதியில் செம்பட்டியிலிருந்து பலகனூத்து போகும்வழியில் உள்ள குடனாற்றுமேல் உள்ள பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : ஆத்தூர் தொகுதியில் செம்பட்டியிலிருந்து பலகனூத்து போகும்வழியில் உள்ள குடனாற்றுப் பாலம் மிக மோசமான நிலைமையில் இருக்கிறது என்று மதுரை மேற்கு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கூறப்பட்டு, அதிகாரிகள் மதிப்பீடு செய்து தீர்மானம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்தப் பாலத்தைக் கட்ட ஆவனச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தப் பாலத்திற்கு 6 லட்சம் ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலை சீர்பட்ட பிறகு இதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.